செ.வெ.எண்:09/2017 நாள்:05.10.2017

## சிவகங்கை மாவட்டம்

**மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வாழ்வாதாரத்தையும், வேலைவாய்ப்பினையும் சீரிய முறையில் ஏற்படுத்தும் பொருட்டு சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 28.10.2017 அன்று நடைபெற உள்ளது.**

சிவகங்கை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வாயிலாக வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் வாழ்வாதாரத்தையும் வேலைவாய்ப்பினையும் சீரிய முறையில் ஏற்படுத்தும் பொருட்டு ஒவ்வொரு காலாண்டிற்கும் சிறப்பு தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து 28.10.2017 அன்று வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுவதால் இம்முகாமில் விருப்பமுள்ள தனியார் துறை வேலையளிப்பவர்கள் (Private Employer) கலந்து கொண்டு தங்களது நிறுவனங்களுக்கு தேவைப்படும் பணியாளர்களை தேர்வு செய்து கொள்ளலாம்.

எனவே, விருப்பமுள்ள தனியார் துறை நிறுவனங்கள் 13.10.2017க்குள் கீழ்கண்ட தொலைபேசி வாயிலாகவோ மின்னஞ்சல் வாயிலாகவோ அல்லது நேரிலோ மாவட்ட வேலைவாய்ப்பு அலவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி.ம.பேச்சியம்மாள் அவர்கள் தெரிவித்துள்ளார்.

தொலைபேசி எண்: 04575-240435.

மின்னஞ்சல் : deo.svg@gmail.com

::வெளியீடு::
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.